Minimum wages for Motor Transport employees

* 623 *Q.*—Sri M. JAGANNATHAN : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether any bus owners have not implemented the Minimum Wages (Madras) Rules, 1953, in the South Arcot district; and

(*b*) what action the Government propose to take against them?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (*a*) The minimum rates of wages fixed for the employment in public motor transport are being paid by the employers in the South Arcot district. The contraventions generally noticed in most of the public motor transport services, relate to non-maintenance of registers or failure to display notices.

(*b*) Whenever such contraventions are noticed, inspection orders are issued with a view to taking up suitable action against the persistent defaulters.

9-50 a.m. Sri T. S. RAMASWAMY PILLAI : Sir, may I know whether wages are being paid according to the Minimum Wages Act in the Government Transport itself?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : Sir, this question must be put to the Hon. Minister concerned.

Sri K. B. S. MANI : கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்பாக தொழில் அமைச்சர் அவர்களின் தலைமையில் தஞ்சை ஜில்லா பட்டுக்கோட்டையில், பஸ், லாரி தொழிலாளர்கள் மாநாடு நடைபெற்று பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அதில், அவர்களின் பிள்ளைகளுக்கு படிப்பு வசதிகள், மற்றபடி அவர்களின் குடும்பத்தில் உள்ளவர்கள் சிறு சிறு கைத்தொழில்கள் செய்ய உதவி செய்வது போன்ற தீர்மானங்களை நிறைவேற்றியிருக்கிறார்கள். அது, சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்களுக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது. அது பரிசீலிக்கப்பட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

The Hon. Sri M. BHAKTAVATSALAM : இது வேறு விஷயம். தனி கேள்வி வேண்டும்.

Sri A. GOVINDASAMY : தென் ஆற்காடு ஜில்லாவில் ஒரு சில பஸ் முதலாளிகள் குறைந்த சம்பளம் கொடுத்து விட்டு அதிகப்படியான சம்பளம் வாங்கியதாக ஸ்டாம்பில் கையொப்பம் இடும்படி தொழிலாளர்களை வற்புறுத்துவதால் அடிக்கடி தகராறுகள் வருவது அரசாங்கத்திற்கு தெரியுமா ? அதைத் தடுக்க என்ன நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

The Hon. Sri M. BHAKTAVATSALAM : அங்கத்தினர் அவர்கள் அதைப்பற்றிய விவரங்கள் எழுதியனுப்பினால் கவனிக்கலாம்.

Price of foodgrains

* 624 *Q.*—Sri A. VEDARATHNAM : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

(அ) உணவுப் பண்டங்கள், குறிப்பாக நெல் விலை நாளுக்கு நாள் ஏறிக்கொண்டிருப்பதைத் தடுக்க அரசாங்கம் என்ன முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறது ?